International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313

தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)

Volume: 05 Issue: 01 January to March 2023 www.irjtsjournal.org

# நாட்டுப்புறக் கதைகளும் மக்கள் வாழ்வியலும்

முனைவர். சீமான் இளையராஜா
உதவிப் பேராசிரியர்
நாட்டுப்புறவியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - *613010*

**ஆய்வுச் சுருக்கம்**

ஒரு நாட்டுப்புறக் கதை ஒரு கதைசொல்லியிலிருந்து இன்னொரு கதைசொல்லிக்கு மிக எளிதாக பயணிக்கிறது. ஒரு குறிப்பிட்ட கதையானது அதன் வாய்மொழி வடிவத்தைக் காட்டிலும் அதன் அடிப்படை வடிவத்தாலும் கதைக் கருப்பொருளாலும் வகைப்படுத்தப்படுவதால், அது மொழி எல்லைகளை சிரமமின்றி கடந்து செல்கிறது. ஒரு புனைகதையை உரைநடையின்வழி வாய்வழியாகச் சொல்லுதல் நாட்டுப்புறக் கதைகளாகும். பொதுவாக மிருகங்கள் மனிதர்கள் பற்றிய வீ ரத்தைக் கதைகளாகக் கூறுவர். அதே சமயம் கொள்கைக்காரர்கள் பற்றிக் கதைகளும் இருக்கும். கதைகளினுள் இடையில் உபகதைகளும் வரும், சமூகச் சடங்குகளை வலியுறுத்தும் கதைகள், சமயக் கதைகள், விளையாட்டுக் கதைகள், நீதிக்கதைகள் போன்ற உபகதைகளும் நாட்டுப்புறக் கதைகளில் அடங்கும். வாய்வழி கற்பனைக் கதை, எந்த இறுதி தோற்றத்திலிருந்து வந்தாலும், காலத்திலும் இடத்திலும் நடைமுறையில் உலகளாவியது. சிலர் மிகவும் எளிமையான கதைகளையும் மற்றவர்கள் பெரும் சிக்கலான கதைகளையும் கூறுகிறார்கள். உண்மைக்கும், புனைகதைக்கும் இடையேயான வேறுபாடு கதை சொல்பவரின் நம்பிக்கைகளையும் கதை கேட்பவரது நம்பிக்கைகளையும் ஒப்பீடாகப் பிரதிபலிக்கிறது. ஒரு சமூகத்திலிருந்து மற்றொரு சமூகத்திற்கு புராணக்கதையும், மரபுவழிக்கதையும் ஊடுருவும் போது நம்பிக்கையற்று ஏற்றுக் கொள்ளப்படுவதுண்டு. இவை ஊடுருவிய சமூகத்தில் நாட்டுபுறக் கதைகளாய்ப் பிரதிபலிக்கின்றது.

முக்கிய வார்த்தைகள்:

தாதாஜி கொண்டதேவ், பாபிரியஸ், நாட்டுப்புறக் கதைகள், ஏட்டிலக்கியங்கள், பரமார்த்த குரு கதை

**முன்னுரை**

ஒரு மனிதன் சமுதாயத்தில் வாழ்வதற்கே பலவிதமான பயிற்சியைப் பெற்றவனாக இருத்தல் வேண்டும். அத்தகைய பயிற்சியைத் தன்புத்தி, சொல் புத்தி என்னும் இரண்டு நிலைகளில் பெற முடியும். இதனைத் தன்புத்தி இருக்க வேண்டும்



© 2023, IRJTSR

இல்லையெனில் சொல் புத்தி இருக்க வேண்டும் எனும் பழமொழியினால் அறியலாம். தன்புத்தி என்பது ஒருவனது பட்டறிவு அல்லது அனுபவ அறிவாகும். தன்புத்தி என்பது தனிமனிதனது வாழ்க்கையில் நேர்ந்த சொந்த அனுபவங்களால் உருவாகும் அறிவு ஆகும். சொல் புத்தி என்பது சமுதாயத்தில் வாழும் மக்களின் அனுபவங்களைக் கொண்டு உணர்த்தப்படுவது ஆகும்.

ஒவ்வொரு மனிதனும் தானே பட்டு அனைத்தையும் அறிவது என்பது இயலாதது. ஒருவனது வாழ்க்கையில் அனைத்து நிகழ்வுகளும் நிகழ வாய்ப்பில்லை. பட்டறிவு என்பது ஒன்றை அனுபவித்த பிறகு உருவாவது ஆகும். ஒரு நிகழ்ச்சியினைச் சந்திக்கும் போது நன்மையும் ஏற்படலாம், தீமையும் ஏற்படலாம். அத்தகைய துன்பங்கள் ஒருவனது வாழ்க்கையில் நிகழாமல் இருப்பதற்கும், இன்பங்கள் ஏற்படுவதற்கும் சமுதாயத்தின் பட்டறிவு உதவுகிறது. சமுதாயத்தின் பட்டறிவினைச் சொல்லித் தருவதுதான் சொல் புத்தி எனப்படும். இதன் அடிப்படையில் அறிவினைக் குழந்தைகளுக்கு ஊட்டுவதற்குக் கதைகள், பாடல்கள், நாடகங்கள், கூத்து முதலானவை ஊடகங்களாகப் பயன்படுகின்றன.

நாட்டுப்புறக் கதைகள்

நாட்டுப்புறக் கதைகள் ஒவ்வொன்றும் ஏதேனும் ஒரு செய்தியினை வெளியிடுவதாக அமைவதைக் காணமுடிகிறது. இவ்வாறு செய்திகளை வெளியிடும் கதைகளின் வழி குழந்தைகளுக்கு அறிவினை ஊட்டுவதற்கு அவர்களது பெற்றோர்கள் முன்வருகின்றனர். கதைகள் அறிவினைப் பரவச்செய்யும் ஆற்றல் மிக்கவை என்பதனை முன்னோர்கள் உணர்ந்திருக்கின்றனர். எனவே தான் அறிவினை வளர்க்கும் ஊடகமாகக் கதையினைப் பயன்படுத்தியுள்ளனர்.

பாடல்கள் என்பது கதையினைவிடச் சற்று திருந்திய வடிவமாகும். இதன் வழியும் குழந்தைகளுக்கு அறிவினை ஊட்டியுள்ளனர். ஆயினும் பாடல்களை மனப்பாடம் செய்வது எல்லோருக்கும் பொருந்தி வராத காரணத்தினால் பாடல்களை விட கதைகளின் மீது, கதை கூறுபவர் கதை கேட்பவர் ஆகிய இரு சாராருக்கும் நாட்டம் ஏற்படுகின்றது.

கூத்து, நாடகம் இவை இரண்டும் மக்களுக்கு அறிவினை ஊட்டி வந்திருக்கின்றது. இவற்றை இரவு நேரத்தில் ஊர்ப்பொது இடத்தில் நடத்தி மக்களை ஒன்று திரட்டியுள்ளனர். மக்கள் அந்த இடத்திற்குச் சென்று அவற்றைக் காண்பதன் மூலம் அறிவினைப் பெற்றுள்ளனர். கூத்து, நாடகம் ஆகிய நிகழ்வுகள் எல்லா காலங்களிலும் நிகழ்வது இல்லை. இந்த நிகழ்வுகள் இரவு 10.00 மணிக்குத் தொடங்கி விடியற்காலை 6.00 மணி வரையில் நிகழ்த்திருக்கின்றன. மேலும் இவற்றை

நடத்துவதற்குச் சில கட்டுப்பாடுகளும் பொருட்செலவும் தேவையாக இருந்திருக்கின்றது.

மக்கள் வாழ்வியல்

நாட்டுப்புறக் கூத்துகள், நாடகங்கள் நடத்துவதற்குக் காலம், இடம் ஆகியவற்றை முறையாகத் தேர்வு செய்யவேண்டும். அவற்றை நடத்துவதற்குப் பொருட்செலவு அதிகமாகின்ற காரணத்தினாலும், அவற்றைக் காண்பதற்குச் சில கட்டுபாடுகள் இருந்திருக்கின்றன. அத்தகைய கட்டுபாடுகள் இன்றி சில நேரங்களில் கதைகளின் வழி குழந்தைகளுக்கு அறிவினை ஊட்டியுள்ளனர். எனவே, கதையானது குழந்தைகளுக்கு அறிவினை ஊட்ட சிறந்த ஊடகமாகப் பயன்பட்டிருக்கின்றது. குழந்தைகளுக்கு இயல்பாகக் கதை கேட்கும் ஆர்வம் இருக்கும். அவர்களுக்குக் கதையின் வழி அறிவினை ஊட்டுவதற்கு நாட்டுப்புறக் கதைகள் பெருந்துணையாக இருந்திருக்கின்றது.

கி.மு. 235 - இல் வாழ்ந்த 'பாபிரியஸ்' என்பவர் செவேரியசுச் சக்கரவர்த்தின் மகனுக்கு ஈசாப் கதைகளைக் கூறி அறிவு புகட்டினார் என அறியமுடிகின்றது. எவராலும் திருத்த இயலாமல், மூடர்களாய்த் திரிந்த அரசவை குமாரர்களுக்குச் சோமசன்மா என்பவன் கதைகூறி அதன் வழி அவர்களுக்கு அறிவு புகட்டியதாகப் பஞ்சதந்திரக்கதை கூறுகின்றது. தன்னுடைய குருவான “தாதாஜி கொண்டதேவ்” கூறிய கதைகளினால் சிவாஜி வீரனானான் என்பது வரலாற்றுச் செய்தியாகும்.

எனவே, கதைகளின் வழி குழந்தைகளுக்கு அறிவு புகட்டுவது என்பது எளிமையானதாக அமைந்துள்ளது. இதற்கு இத்தகைய கதைகள் தலைசிறந்த சான்றுகளாக இருந்திருக்கின்றன. கதைகள் உணர்த்தும் வாழ்வியல் அடிப்படையில் குழந்தைகளை அவர்களது இளம் வயதில் பேசுதல், பழகுதல், ஒருவருக்கு ஒருவர் உதவுதல் போன்ற நல்ல குணங்களை வகைப்படுத்திக் காட்டலாம்.

குழந்தைகளுக்கு இளம் வயதிலிருந்தே அறிவுரை கூறி வளர்ப்பதில் அவர்களது பெற்றோருக்கு மிகுந்த பங்கு உண்டு என்பதை நாட்டுப்புற மக்கள் நன்கு அறிந்து வைத்திருக்கின்றனர்.

"இளமையில் கல்வி
சிலை மேல் எழுத்து
இளமையில் முயற்சி
முதுமையில் காக்கும்,
இளமையிற் பழக்கம்
எப்போதும் மாறாது”


© 2023, IRJTSR

எனும் பழமொழிகள் இளமைக்காலப் பயிற்சியினை உணர்த்துகின்றன. குழந்தைகளை இளமையில்தான் பழக்க இயலும் முதுமையில் பழக்க இயலாது என்பதனையும் நாட்டுப்புறக்கதைகள் நமக்கு உணர்த்தியுள்ளன. நாட்டுப்புற மக்கள் குழந்தைகளுக்குக் கதைகளின் வழி அறிவூட்டுவது போல் திறமையினையும் இணையாக ஊட்டியுள்ளனர். அவ்வாறு ஊட்டிய திறமையினை மனத்திறமை, தொழிற்திறமை என இருவகைப்படுத்தலாம். இந்த இருவகைத் திறமைகளையும் விளையாட்டுகளின் வழி குழந்தைகளுக்கு ஊட்டியுள்ளனர்.

விளையாட்டு வழியில் கதைகள்

கண்ணாமூச்சி, கிட்டிப்புள், சில்லு விளையாட்டு, பம்பரம், தாயம், பல்லாங்குழி, கழங்காடுதல் முதலான விளையாட்டுகள் மனத்திறமையை வளர்க்க உதவும். இத்தகைய விளையாட்டுகளைச் சான்றுகளாகக் காட்டலாம். இத்தகைய விளையாட்டுகளைப் பார்த்திருப்பதால் மட்டும் ஒருவன் அதனை விளையாடி விடுவது இயலாது. பயிற்சியும், முயற்சியும் தேவையானதாக இருந்திருக்கின்றது. இத்தகைய பயிற்சிகளைக் குழந்தைகளுக்கு விளையாட்டின் வழியாக ஊட்டியுள்ளனர்.

நாட்டுப்புறக் கதைகள் பல்வேறு பொருள் நிலையினைப் பெற்றுப் பலருக்கும் உதவும் வகையில் அமைந்துள்ளது. இத்தகைய கதைகள் சமுதாயத்தில் பிறருக்குப் பயன்படுவதில் கதை கூறுபவருக்கும் பங்கு உண்டு. கதை கூறுவர்கள் அனைத்துக் கதைகளையும் அனைவரிடமும் கூறி விடுவதில்லை. கதை கூறுபவர், கேட்பவர் ஆகியோரது வயது, அனுபவம், சூழல் ஆகியவற்றிக்கு ஏற்பக் கதைகள் மக்களிடையே புழக்கத்தில் இருந்திருக்கின்றன. கதை கூறுபவரைக் கருத்தில் கொண்டு கதை கூறுகின்ற நிலையினை வயதானவர்கள் சிறுவர்களுக்குக் கூறுவது, சிறுவர்களே சிறுவர்களுக்குக் கூறுவது, இளைஞர்கள் இளைஞர்களுக்குள்ளே கூறிக் கொள்வது, என வரிசைப்படுத்திக் காணலாம். குழந்தைகளைப் பாதுகாத்துக் கொண்டிருக்கும் வயதானவர்கள் சிறுவர்களுக்குக் கூறுமிடத்து, அவர்களது மனம் ஏற்கும் விலங்கு, பறவை முதலியானவற்றைப் பாத்திரங்களாகக் கொண்ட கதைகளை மிகுதியாகக் கூறியுள்ளனர்.

நீதி நெறிக்கதைகள்

இத்தகைய கதைகளின் வழியாக நீதியினைக் குழந்தைகளுக்குப் புகட்டி விடுகின்றனர். துடிப்பாக இருக்கும் குழந்தைகள் கூட கதையினைக் கேட்டால் அடங்கி விடுகின்றனர். எனவே கதையானது குழந்தைகளுக்கு மனப்பக்குவத்தை ஏற்படுத்தி நீதியையும்,நேர்மையையும் புகட்டி விடுகின்றது. கதை கேட்பதில் குழந்தைகளுக்குகே உரிய இயல்பான ஆர்வமும் கதை என்ற ஊடகத்தின் வழியாக அவர்களுக்கு நீதியினை ஊட்டுவதற்குப் பெரிதும் உதவுகின்றது.

### சிறுவர்கள் கதைகள்

சிறுவர்களே சிறுவர்களுக்குக் கதை கூறிக் கொள்ளும் பண்பு நாட்டுப்புறங்களில் இன்றும் இருந்து வருகின்றது. அவர்கள் பெரும்பாலும் இயற்கை, விலங்கு, பறவை, பொம்மைப் பற்றிய கதைகளைச் சொல்லிக் கொள்வார்கள். இளையவர் கதைகள் இளையவர்களுக்கிடையே கூறிக் கொள்வது என்னும் வகையில், ஆண்கள் ஆண்களுக்கிடையே கூறிக் கொள்வது, பெண்கள் பெண்களுக்கிடையே கூறிக் கொள்வது என்னும் இருநிலைகளிலும் கதைகளைக் காணலாம். அத்தகைய கதைகள் பெரும்பாலும் பாலியல் தொடர்பான கதைகளாகவே அமைந்துள்ளன.

வயதானவர்கள் கூறுகின்ற கதைகளில் ஒரு வளர்ச்சி நிலையினைக் காணலாம். வயதானவர்கள் கூறுகின்ற கதைகள் சமுதாய மேம்பாட்டுக்கு உதவுவனவாகவே அமையும். அந்தக் கதைகளில் ஒருவித பண்பு, பண்பாடு, பழக்கவழக்கங்கள் அடங்கி இருக்கும். இக்கதைகள் பெரும்பாலும் நாட்டுப்புறக்கதைகளின் வழியாகவே நாம் காணலாம். பழங்காலத்தில் வாழ்ந்த மக்கள் குழந்தைகளுக்குப் பொருத்தமான பயிற்சிகளை அளிப்பதன் மூலம் அறிவு, திறமை, ஒழுக்கம் ஆகியவற்றை அளித்திருக்கின்றது. இத்தகையப் பயிற்சிகளை அளிப்பதற்குப் பாடல், கூத்து, நாடகம், விளையாட்டு முதலியன உதவிய போதும் கதை அதிகமாகப் பயன்பட்டுள்ளது. அன்றைய காலக்கட்டத்தில் சமுதாயத்திற்குக் கதைகள் தான் மிகவும் பயன்பட்டிருக்கின்றது.

### ஏட்டிலக்கியங்களில் கதைகள்

நாட்டுப்புறக் கதைகளில் பழங்கால அரசியல் அமைப்புப் பற்றிய செய்திகள் சற்று அதிகமாகவே காணப்படுகின்றன. அரசவையில் எட்டு அமைச்சர்கள் இருந்ததாக அறியமுடிகிறது. இதனை மணிமேகலை குறிப்பிடும் எண்பேராயத்தோடு ஒப்பு நோக்கிக் கருதலாம். நாட்டிலுள்ள மக்களுக்குத் தொல்லை தந்து கொண்டிருந்த புலி ஒன்றினைக் கொல்லுபவருக்குத் தனது மகளைத் திருமணம் செய்வது தருவதாக அரசர் ஒருவர் பறைசாற்றுவதனையும் காணலாம். புலவர்களுக்கு அரசர்கள் பரிசளிக்கும் வழக்கத்தினை ஏட்டிலக்கியங்கள் சிறப்பாகக் காட்டுகின்றன. அத்தகைய பரிசளிக்கும் வழக்கத்தினை நாட்டுப்புறக் கதைகளின் வழியாக அறிந்து கொள்ள முடிகிறது.

நாட்டுப்புறக்கதைகள் வாய் மொழியாக மக்களிடையே வழக்கில் இருப்பவை. சங்க இலக்கியம், வாய்மொழி இலக்கியம் என்று ஒருசிலர் குறிப்பிடுகின்றனர். இதற்குக் காரணம், அவை ஏட்டில் எழுதப்படாமல் வாய்மொழியாக வழங்கி வந்தமையே என்பது அவர்களது கூற்றாகும். நக்கீரரால் இயற்றப்பட்ட “இறையனார் அகப்பொருள்” உரையானது ஒன்பது தலைமுறை வரை செவி வழியாகக் கூறப்பட்டு வந்து, பின்னர் பத்தாவது தலைமுறையில் ஏட்டில் எழுதப்பட்டதாகவும் குறிப்புக்


© 2023, IRJTSR

கிடைத்திருக்கிறது. இப்படியாக நமது சங்க இலக்கியத்தில் இருக்கும் கதைகள் எல்லாம் ஒரு காலத்தில் வாய்மொழியாகச் சொல்லப்பட்டிருக்கின்றது.

இலக்கியங்கள் வாய்மொழியாக வழங்கி வந்தமைக்குக் காரணம் எழுது பொருள்கள் அவர்களுக்குக் கிடைக்காமல் போயிருந்திருக்கலாம். பின்னால் வாய்ப்புக் கிடைத்த போது அவற்றை ஏட்டில் எழுதிவைத்திருக்கின்றனர். கதைகள் தலைமுறை தலைமுறையாக வாய்மொழி வழக்கில் இருந்து வருகின்ற காரணத்தினால் அவற்றிற்குப் பல மாற்று வடிவங்கள் காணப்படுகின்றன. ஆனால் ஏட்டு இலக்கியங்களில் இவ்வாறு காணப்படுவதற்கு வாய்ப்புகள் இல்லை. பிறரது கருத்துகள் ஏட்டிலக்கியங்களில் இடம் பெறுமாயின் அஃது இடைச் செருகல் என்று சுட்டப் பெறும்.

நாட்டுப்புறக் கதைகள் மக்களிடையே வழங்கி வருகின்ற காரணத்தினால் அவை பேச்சுமொழியினால் அமைந்துள்ளது. மாறாக ஏட்டிலக்கியங்கள் பேச்சு மொழி வழக்கினை ஏற்பதில்லை. இவ்வாறு அடிப்படையிலேயே சில வேறுபாடுகளை நாட்டுப்புறக்கதையும், ஏட்டிலக்கியமும் பெற்றிருக்கின்றன. மாறாக ஏட்டிலக்கியங்கள் பேச்சு மொழி வழக்கினை ஏற்பதில்லை. நாட்டுப்புறக் கதைக்கும் ஏட்டிலக்கியத்திற்கும் அடிப்படையில் வேறுபாடுகள் இருந்த பொழுதும் நாட்டுப்புறக் கதையானது ஏட்டிலக்கிய வளர்ச்சிக்கு உதவி வருகின்றது. ஏட்டிலக்கியப் புலவர்கள் தங்களது இலக்கியத்திற்கு உதவும் வகையில் ஒருசில இடங்களில் மட்டும் நாட்டுப்புறக் கதைகளை எடுத்தாள்வது ஒரு வகையாகவும் கதைக் கருத்துகளுக்கு வடிவம் தருவது மற்றொரு வகையாகவும் அமைகின்றது.

ஏட்டிலக்கியப் புலவர்கள்

பழங்காலத்தில் ஏட்டிலக்கியப் புலவர்கள் நாட்டுப்புறக் கதைகளை முழுமையாக ஒதுக்கிவிடவில்லை. தங்கள் கூற வந்த கருத்துகளை விளக்குவதற்குத் தங்கள் இலக்கியத்தில் ஏட்டிலக்கியப் புலவர்கள் நாட்டுப்புறக்கதைகளை எடுத்துக்காட்டுகளுடன் பதிவு செய்துள்ளனர்.

காப்பியங்களில் இடம் பெறும் கதைகளை மையக்கதை, கிளைக்கதை, துணைக்கதை என மூன்றாக வகைப்படுத்துவர். காவியங்களில் இடம் பெறும் துணைக் கதைகள் நாட்டுப்புறக்கதைகளாக இருக்க வாய்ப்புண்டு. சிலம்பில் இடம் பெறும் பார்ப்பனி கீரிக்கதை துணைக் கதையாகும். இக்கதை நாட்டுப்புறக்கதை என்று கூறப்பட்டுள்ளது. இதனைப் போன்று தமிழ் இலக்கியங்கள் பலவற்றிலும் உரையாசிரியர்களின் உரைகளிலும் நாட்டுப்புறக்கதைகள் இடம் பெற்றுள்ளன. ஆரம்பக்காலத்தில் ஏட்டிலக்கியப் புலவர்கள் உத்தி முறையின்றி நாட்டுப்புறக் கதையினைப் பாடல் வடிவில் அமைந்திருந்தமைக்குத் திருதக்க தேவரின் நரிவிருத்தம் என்னும் நூல் சான்றாக அமையும். இந்நூலில் பதினெட்டுக் கதைகள்

காணப்படுகின்றன. இக்கதையினை பாமரர் பலரும் அறிந்திருந்தனர் என்று இதனைப் பதிப்பித்த மு. இராகவ அய்யங்கார் குறிப்பிடுகின்றார்.

நரிவிருத்தம் போன்று சமணச் சமயக் கருத்துகளைத் தாங்கிய எலிவிருத்தம், கிளிவிருத்தம் ஆகிய கதை நூல்கள் அழிந்துவிட்டதாகவும் சொல்லப்படுகிறது. இவற்றை அடிப்படையாகக் கொண்டு நோக்க, நாட்டுப்புறக்கதைகளுக்கு மனிதனின் கவனத்தை ஈர்க்கும் இயல்பு உண்டு என்பதனை மனத்திற்கொண்டு ஏட்டிலக்கியப் புலவர்கள் அவற்றிக்குப் பாடல் வடிவம் கொடுத்திருத்தல் வேண்டும். மக்கள் வழக்கிலிருந்தும் நாட்டுப்புறக்கதையிலிருந்தும் தான் சிலப்பதிகாரக்கதை வளர்ந்திருத்தல் வேண்டும் என்று எண்ண வேண்டியுள்ளது.

நாட்டுப்புறக் கதைகளைத் தொகுத்து அவற்றிற்கு ஏட்டிலக்கிய வடிவம் தந்தமை ஒரு புறமிருக்க, நாட்டுப்புறக் கதைகளைத் தமது நடையில் கதைகளைப் போன்று எழுதியவர்களும் உண்டு. வீரமாமுனிவர் கொடுந்தமிழ் நடைக்குச்சான்று தருமிடத்துப் பல்வேறு நாட்டுப்புறக் கதைகளைத் தொகுத்து, அவற்றை ஒன்றோடு ஒன்று இணைத்துப் "பரமார்த்த குரு கதையினை" உருவாக்கியுள்ளதாக அறிய முடிகிறது. எனவே வழக்கிலிருந்த நாட்டுப்புறக்கதைகளைத் தொகுத்து அவற்றிற்குத் தமது நடையில் வடிவம் தந்தமை ஒன்றே வீரமாமுனிவரது செயல் என்பது விளங்கும் வீரமாமுனிவர் எழுதியதைத் தொடர்ந்து வீராசாமி செட்டியார் எழுதிய விநோதரச மஞ்சரியில் நாட்டுப்புறக்கதைகள், சிறுகதைகள், கட்டுரைகள் முதலியவை காணப்படுகின்றன.

நாட்டுப்புறக் கதைகளை ஏட்டிலக்கியத்தில் எடுத்தாளுகின்ற பொழுது மூல வடிவத்திலிருந்து குறைதல், கூடுதல், மாறுபடுதல் ஆகியன நிகழ்வது இயற்கை. மக்கள் மத்தியில் கதைகளைக்கூறும் வழக்கம் மிகப் பழங்காலத்திலிருந்து தமிழ்நாட்டில் இருந்து வருவதாக அறிய முடிகிறது. நாட்டுப்புறக்கதைக்கரு மக்கள் ஏற்கும் வகையில் ஏட்டிலக்கிய வடிவம் பெறுமேயானால் பின்னர் அது மக்கள் வழக்கில் இடம் பெற வாய்ப்பு உண்டு.

புத்தர் ஜாதகக்கதை, பிருகத்கதா, கதாசரித்சாகரம், பஞ்ச தந்திரகதை, விக்கிரமாதித்தின் கதை, மதன காமராசன் கதை, தெனாலிராமன் கதை, மரியாதை ராமன் கதை, இராயர் அப்பாஜி கதை முதலான கதைகளை நோக்க, அவை தனிப்பட்ட சிலரது வாழ்வோடு தொடர்புபடுத்தப்பட்டுச் சுட்டப்படுகின்றன. இவற்றின் கதைகள் நாட்டுப்புற மக்களிடையே இன்றும் வழகத்தில் உள்ளன.

நாட்டுப்புறக் கதைகளை ஏட்டில் எழுதிவைக்காமல் இருந்த காரணத்தாலும், ஏட்டிலக்கியப் புலவர்கள் அவற்றை ஒதுக்கிய காரணத்தினாலும் கதைகளைப்பற்றிய


© 2023, IRJTSR

பழைய வரலாற்றினை அறிவது கடினமாக இருக்கிறது. உரையாசிரியர்களின் உரைகளின் வழியாகத் தொல்காப்பியர் சுட்டிய

"பொருளொடு புணராப் பொய்ம்மொழியும்
பொருளொடு புணர்ந்த நகைமொழியும்"

என்பதை நாட்டுப்புறக் கதைகள் என அறிய முடிந்தது.

மேலும், உரையாசிரியர்கள் காலத்திலிருந்த நாட்டுப்புறக் கதைத் தொகுப்பு நூல்களான சிறு குரீஇயுரை, தந்திரவாக்கியம் ஆகியவைப் பற்றிய குறிப்புகளும் கிடைத்துள்ளன. நெடுநெல்வாடையில் இடம் பெறும் "செம்முகச் செவிலியர் கைம்மிக்க குழீஇ குறியவும் நெடியவும் உரை பல பயிற்றி" என்னும் அடிகளைக் கொண்டு தலைவனைப் பிரிந்திருந்த தலைவிக்குச் செவிலித்தாயர் நாட்டுப்புறக் கதைகளாகச் சிறுகதைகளையும், நெடுங்கதைகளையும் எடுத்துக்கூறுவதாக இப்பாடல் வரிகள் அமைந்துள்ளது.

அசோகவனத்தில் இரவில் சீதையைக் காவல் காத்துக்கொண்டிருந்த அரக்கியர்கள் தூக்கம் வராமலிருக்கத் தங்களுடைய கதைகளைக் கூறிக் கொண்டதைக் கம்பராமாயணத்தின் வழி அறியலாம். எனவே இந்த ஏட்டிலக்கியங்கள் நாட்டுப்புறக் கதையின் பழங்கால நிலையினை அறிவதற்கு உதவுவதுடன் தற்போது காணப்படும் தொகுப்புகளை வைத்து ஆய்வு மேற்கொள்வதற்கும் உதவுகின்றன.

## முடிவுரை

நாட்டுப்புறக் கதைகளை ஏட்டிலக்கியப் புலவர்கள் தங்கள் நூல்களில் உதாரணங்களாக எடுத்தாண்டுள்ளதோடு கதைகளுக்குப் பாடல் வடிவம், காவிய வடிவம் தந்திருக்கின்றனர். நாட்டுப்புறக் கதைகளைத் தொகுத்து அவற்றிற்கு வடிவம் தரும் முயற்சியும் ஏட்டிலக்கியப் புலவர்களால் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. நாட்டுப்புறக்கதைகளை ஏட்டிலக்கியப் புலவர்கள் தங்கள் நடையில் தங்களது கதைகளைப் போன்றும் எழுதியிருக்கின்றனர். எனவே, ஏட்டிலக்கியம் நாட்டுப்புறக் கதையின் வரலாற்றை அறிய துணைபுரிந்திருக்கின்றது. மக்கள் வாழ்வியலோடு நாட்டுப்புறக் கதைகளும், நாட்டுபுறப் பாடல்களும், நாட்டுப்புறக் கூத்துகளும் அறிவினை வளர்ப்பதற்குப் பயன்பட்டிருக்கின்றது.

## பயன்பட்ட நூல்கள்

[1] தமிழ்நாட்டு நாடோடிக்கதைகள் - கி.ராஜநாராயணன்

[2] வட்டார வழக்குச் சொல்லகாரதி - கி.ராஜநாராயணன்

[3] திராவிட மத்திய காலக்கதைகள் - பண்டித நடேச சாஸ்திரி

[4] இந்தியக் கதைமரபு - சோ.நடராஜன்

[5] தமிழ்க் காப்பியங்களில் கதைவழிக்கல்வி - முத்துச்சண்முகம்@பிரேமா

[6] பஞ்சதந்திரக்கதைகள் - ஓர் ஆய்வு - அ.ம.சத்தியமூர்த்தி

[7] நரிவிருத்தம் ஆராய்ச்சித் தொகுதி - மு.இராகவையங்கார்

[8] பரமார்த்த குருவின் கதை, இலக்கியத்திறானாய்வு- ஜோசப் சுந்தர்ராஜன்

[9] இலக்கியமரபு - மு.வரதராஜன்

[10] நாட்டுப்புறக்கதைகள் - கா.அப்பாதுரை

[11] தமிழக நட்டுப்பாடல்கள் - மு.வை.அரவிந்தன்

[12] தொல்காப்பியம் - இளம்பூரணர்

[13] சமுதாய நோக்கில் பழமொழிகள் - இளந்திரையன்

[14] ஈசாப் குட்டிக்கதைகள் - வை.கோவிந்தன்

[15] நாட்டுப்புற இலக்கியவரலாறு - சு.சண்முகசுந்தரம்

[16] கம்பராமாயணம், சுந்தரகாண்டம் - கம்பர்